# இந்தியா இலங்கை மீனவர் பிரச்சனை

மார்ச் 13,2014

இந்தியா மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்மீது இந்திய அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது.இலங்கை கடற்பரப்புகளில் மீன்பிடித்ததாக கூறப்படும் இந்திய மீனவர்களை சிறைபடுத்திய அதிகாரிகளிடமிருந்து மீட்க இந்திய அரசு விடா முயற்சி மேற்கொண்டது.இதே போன்று இந்தியா எல்லையில் மீன் பிடித்த இலங்கை மீனவர்களை இந்திய அதிகாரிகள் கைது செய்தனர்.

மீனவர்களின் பிரச்சினையை மனிதாபிமான மற்றும் வாழ்வாதார பரிமாணங்கள் அடிப்படையில் வைத்துகொண்டு,26 அக்டோபர் 2008 ல்,இலங்கை அரசுடன் ஒரு கூட்டு அறிக்கை மூலம் நமது அரசு ஒரு புரிதலை எட்டியுள்ளது. சர்வதேச கடல் எல்லை கோட்டை (ஐ எம் பி எல் ) கடந்து வரும் இந்திய மற்றும் இலங்கை மீனவர்களை நல்லெண்ணத்துடன் சமாளிக்க நடைமுறைகளை ஏற்பாடு செய்ய தீர்மானித்தது.மேலும்,ஜனவரி 2012 ல் நடந்த கடல்தொழில் கூட்டு குழு கடைசி சந்திப்பில் ,இரு தரப்பு மீனவர் சங்கங்களும் கூட்டம் நடத்த ஒப்புக்கொண்டது.இதன்படி,சென்னையில் 27 ஜனவரி 2014 ல் விவாதங்களின் முதல் சுற்று நடந்தது.இதில் இந்தியா மற்றும் இலங்கை மீனவசங்கங்கள் பங்கேற்றன.விரைவில் கொழும்பில் அடுத்த சுற்று பேச்சுவார்தை நடத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

மீனவர் சங்கங்களின் விவாதங்கள் அடுத்த சுற்றுக்கு முன்னதாக ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக காவலில் உள்ள மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க இலங்கை மற்றும் இந்திய அரசு தீர்மானம் கொண்டுள்ளது.இந்த விடுவிப்புக்கான பணி 12 மார்ச் 2014 முதலே இருபுரமும் தொடங்கப்பட்டுள்ளன.

புது டில்லி

13 மார்ச் 2014